சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **314 / 2022**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி..A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி 07.10.2025ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : கேசவராஜ் | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) TN 88 H 3228 என்ற லாரியின் காப்பீடு உண்மை நகல் - எ.ம.சா.ஆ.1

2) சம்பவ வரைபடம் கணினி நகல் - எ.ம.சா.ஆ.2. மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

விபத்திற்கு காரணமான TN 88 H 3228 என்கின்ற லாரியானது எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் காப்பீடு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய லாரியின் ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள லாரியின் ஓட்டுநர் மீது தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிக்கையும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஆவணத்தின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி விபத்து நடந்த சாலையானது நான்கு வழி சாலை என்றால் சரிதான். மேற்படி சாலையானது மேற்கு நோக்கி செல்வதற்கும், கிழக்கு நோக்கி செல்வதற்கும் இடையே தடுப்பு உள்ளது. மேற்படி விபத்தானது சாலையின் தென்புறம் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்றபோது தான் விபத்து ஏற்பட்டது. மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனமும், விபத்திற்குள்ளான வாகனமும் ஒரே திசையில் தான் வந்தது என்றால் சரிதான். மேற்படி சாலையில் இருசக்கர வாகனம் ரோட்டின் இடதுபுறமாகவும், நான்கு சக்கர வாகனங்கள் ரோட்டின் வலது புறமாகவும் செல்லவேண்டும் என்றால்

சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் எ.ம.சா.ஆ.2 ஆவணத்தின் படி மேற்படி விபத்தானது சாலையின் தென்புறமாக நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி லாரியானது இருசக்கர வாகனத்தின் முன்னால் சென்றுக்கொண்டிருந்தபோது திடீரென்று நின்றதால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. உடலில் ஏற்பட்ட காயத்தினால் தலையில் ஏற்படும் பாதிப்பினால் மரணம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிருரையில் சொல்லாத சங்கதிகளை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சங்கதிகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் 7,8,9 -ல் சொல்லப்பட்ட சங்கதிகளும் வழக்கிற்காக மாற்றி கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. காப்பீட்டு விதிமுறைகளின் படி எங்களது நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வழக்கில் இருந்து தப்பிக்வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தில் இறந்தவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் மற்றும் சாலை விதிகளை பின்பற்றியும் வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-(ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.